**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.97/2024**
**PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | சண்முகம் |
| **Father's Name** | : | குப்புசாமி |
| **Village** | : | மேல்புழுதியூர் |
| **Taluk/District** | : | செங்கம் |
| **Caste** | : | ---------- |
| **Calling** | : | |
| **Religion** | : | ---------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026.
A1 present. A2 and 3 died.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேல்புழுதியூர் கிராமத்தில் குடியிருந்து டாஸ்மாக்கில் மேல்பார்வையாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கில் இறந்த மேலும் இரண்டு நபர்களையும் நான் பார்த்துள்ளேன். நான் செங்கம் தாலுக்கா பெரும்பட்டம் கிராமத்தில் அரசு மதுபானக்கடையில் கடந்த 10 ஆண்டுகளாக மேல்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் லட்சுமணன், சிவக்குமார், முருகன் ஆகியோர் விற்பனையாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 25.01.2019 அன்று மதியம் 12.15 மணிக்கு மதுபானக்கடையில் லட்சுமணன் மற்றும் முருகன் ஆகியோர் இருந்தார்கள். சிவக்குமார் என்பவர் ஓய்வு எடுக்க சென்றுவிட்டார். முருகன் அவரின் உறவினர் இறந்துவிட்டதால் அந்த இறுதிசடங்கிற்கு கலந்துகொள்ள சென்றுவிட்டார். நான் அன்றைய தினம் திருவண்ணாமைலையில் உள்ள

தலைமை அலுவலகத்திற்கு வருகைபதிவேடு கொடுக்க சென்றுவிட்டேன். நான் மாலை 7.15 மணிக்கு கடைக்கு வந்துவிட்டேன். நானும் லட்சுமணனும் கடையில் விற்பனை செய்துகொண்டிருந்தோம். விற்பனை செய்துவிட்டு 10.00 மணிக்கு விற்பனை பணமான ரூ. 2,82,600/- யை எனது மேல் சட்டைக்குள் போட்டிருந்த பனியனுக்குள் போட்டுக்கொண்டு நானும் லட்சுமணனும் கடையை சாத்தினோம். கடையை சாத்தி பூட்டு போடும்போது மறுநாள் அரசு விடுமுறை என்பதால் பூட்டிற்கு சீல் சுத்திக்கொண்டிருக்கும்போது கிழக்கு பக்கமாக என் தலைக்குமேல் "டமால்" என்று சத்தம் கேட்டது. நானும் லட்சுமணனும் "யார் வருவது "என்று கேட்டேன். அப்போது இரண்டு நபர்கள் துணியால் முகத்தை மூடிக்கொண்டு கடை அருகில் வந்தார்கள். அப்போது அந்த இரண்டு நபர்கள் " சலோ சலோ " என்று இந்தியில் பேசி " பிஸ்டலை காண்பித்து இருசக்கர வாகனத்தின் பெட்டியை திறக்க சொன்னார்கள் . "என்னிடம் பணம் இல்லை எங்க ஆபீசர் எடுத்துகினு போய்ட்டாரு " என்று நான் தமிழில் சொன்னேன். நான் ஒரு அடி எடுத்துவைத்தபோது என்னுடைய இடது காலில் பிஸ்டலில் சுட்டார். எனக்கு ரத்தம் வந்தது. என்னை விட்டுவிட்டு சேல்ஸ்மேன் லட்சுமணனை கடையை திறக்க சொல்லி அந்த முகமூடி அணிந்த 2 நபர்களும உள்ளே சென்றார்கள். கல்லாவில் பணம் இல்லை என்று தெரிந்தவுடன் பிஸ்டல் வைத்திருந்த அந்த நபர் லட்சுமணின் தலையில் ஓங்கி குத்தினார். அப்போது ரத்தம் வந்தது. அதை பார்த்தவுடன் நான் ஓடி பக்கத்தில் இருந்த வீட்டில் போய் ஒளிந்து கொண்டேன். கொஞ்சநேரம் கழித்து லட்சுமணன் நான் இருந்த வீட்டிற்கு வந்துவிட்டார். என் மனைவிக்கு போன் செய்து தகவல் சொன்னேன். அந்த 2 நபர்களும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். நான் இருந்த இடத்திற்கு என் மனைவியும் சிவக்குமாரும் வந்து என்னையும்

லட்சுமணனையும் செங்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு முதல் சிகிச்சை செய்துவிட்டு மேல் சிகிச்சைக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். அங்கு செங்கம் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக எழுதி கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.